1969 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை எண் 45-க்கு டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

கோரிக்கை எண் 45-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்த திரு. பி. வேலுசாமி அவர்கள் இருக்கையிலில்லையாதலால் அவரது வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,20,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும் ".

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோரிக்கை எண் 47-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்த திரு. பி. வேலுசாமி அவர்கள் இருக்கையிலில்லையாதலால் அவரது வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கோரிக்கை எண் 47-க்கு திரு. க. இராமமூர்த்தி, திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

பேரவை முன்னுள்ள கேள்வி :

" கோரிக்கை எண் 47—மாநில அரசுவழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 36,39,13,300-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று பேரவை நாளை காலை 9 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

பிற்பகல் 2-41.

8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*

'Nil'

B. *Reports, Notifications and other papers.*

*82. The Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Bill, 1969 (L.A. Bill No. 18 of 1968) as passed by the Legislative Assembly on the 28th February 1969 with Annexure containing the amendments made by the Legislative Council on the 3rd March 1969.

* Despatched to Members on 12th March 1969.